# ORDER OF THE DISTRICT MAGISTRATE AND DISTRICT COLLECTOR

**(RELATING TO PREVENTIVE MEASURES TO SAFEGUARD HUMAN LIFE/PUBLIC HEALTH)**

**PRESENT: THIRU.V.ANBUSELVAN, I.A.S**

**(ISSUED UNDER SECTION 144 Cr.P.C)**

---

**C3/8149/2020** **Dated: 24.03.2020**

Whereas the Government vide their Order , G.O.(Ms.)No.152, Health and Family Welfare (P1) Department, dated 23.03.2020 have ordered certain restriction imposed in the territorial jurisdiction of the State of Tamil Nadu from 18.00 Hrs of 24.03.2020 to 06.00 Hrs of 01.04.2020 under Section (2) of Epidemic Disease Act,1897.

Whereas, it has been noticed that there is imminent possibility to mitigate the spread of the COVID-19 in Cuddalore District, the following prohibitory orders to maintain public health, public safety and public order are hereby issued.

- Any congregation of more than 5 persons in public places is prohibited.
- All suspected cases and foreign returnees who arrived after 1st March, 2020, are directed to remain under strict home quarantine for such period as decided by Deputy Director, Health Service, Cuddalore District.
- People are required to stay at home and come out only for accessing basic and essential services and strictly follow social distancing norms detailed in this order and maintain a distance of 1 meter or 3 feet norms.
- All shops, commercial establishments, TASMAC shops, shall close their operations subject to the exceptions indicated in the Government Order mentioned above.
- Public transport services including operation of private buses, stage/contract carriages, State Transport Undertakings, Metro services, taxis, share-autos, auto-rickshaws and ride sharing services including air-conditioned bus services of State Transport Corporation and private operators will not be permitted. Except the categories indicated in the Government Order mentioned above.
- All inter-district services shall not be operated.

**Functioning of supermarkets and departmental stores:**

As mentioned above, the restrictions will not apply to shops of food, groceries, milk, bread, fruit, vegetable, meat, fish, etc. (including departmental stores and supermarkets selling these goods)

1. Only one person per family shall be allowed for shopping.
2. Shops that are under the exempted categories shall ensure that at

any given time are not crowded and customers inside also maintain social distancing of 3 feet between each other. The premises shall be cleaned and disinfected three times daily. They shall also ensure that sanitizers are provided at the entrance for all customers. If any shops violate the above rules legal action shall be taken against them.

3. To avoid panic buying these shops may be opened from 6 A.M. to 10 P.M. and staff therein shall work in shifts.
4. Preference should be given to senior citizens and differently abled persons for the first two hours of opening.

And Whereas, emergent circumstances do not admit the service of notice to the parties concerned necessitating this order to be passed ex-parte as per the provision laid down u/s.144(2) Cr.P.C

Now, therefore, with a view to curtail the spread of COVID-19 and to maintain public health, public safety and public order in Cuddalore District, I do hereby promulgate order u/s.144 Criminal Procedure Code,1973 prohibiting any congregation of more than 5(five) persons in public places in Cuddalore District.

***This Order will be effective from 18.00 hrs of 24.03.2020 to 06.00 hrs of 01.04.2020***

Issued under my hand and seal dated this 24th day of March'2020

24.3.2020

District Magistrate and
District Collector
Cuddalore District

To
The Superintendent of Police, Cuddalore.
Sub Divisional Magistrate/Sub Collector, Chidambaram/Vridhachalam
Sub Divisional Magistrate/ Revenue Divisional Officer, Cuddalore
All Executive Magistrate/Tahsildars, Cuddalore District
All Deputy Superintendent of Police, Cuddalore District
Joint Director, Health Services, Cuddalore
Deputy Director, Health Services, Cuddalore
All Department Heads, Cuddalore District ( This order should be displayed in their office notice board for public notice)
Manager, Govt Printing Press, Vridhachalam ( This order should be published in the District Gazette)
District Information Officer, NIC, Cuddalore( This order should be published in the District Website)
Public Relation Officer, Cuddalore ( This order should be published in the Electronic Media and Newspaper)
Disaster FM Radio ( This order should be broadcasted)

# Cr.P.C 144 Order Issued

**Publish Date** : 24/03/2020

செ.வெ.எண்:-30/2020 நாள்:24.03.2020
திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்டத்தில் 144 தடைச்சட்டம் இன்று(24.03.2020) மாலை 6.00 மணி முதல் அமல் – மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

கொரோனா வைரஸ் நோயை முற்றிலும் தடுக்கும் விதமாக சமூக தனிமைப்படுத்துதலை தீவிரப்படுத்தும் வகையில், திண்டுக்கல் மாவட்டத்தில்
Cr.P.C.-144 ன் கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் ஊரடங்கு இன்று(24.03.2020) மாலை 6.00 மணி முதல் அமல்படுத்த திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இத்தடைச்சட்டத்தின்படி பொது இடங்களில் 5 நபர்களுக்கு மேல் கூட்டமாக சேர்ந்திடல் கூடாது.

பொது மற்றும் தனியார் போக்குவரத்துகளான ஆட்டோக்கள், வாடகை கார்கள்(டாக்சி) ஆகிய போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் (பால், காய்கறிகள் உள்ளிட்ட) போக்குவரத்துகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களான காய்கறி கடை, மளிகை கடை, மீன், இறைச்சிக்கடைகள், மருந்தகங்கள், பால் மற்றும் நியாயவிலைக் கடைகள்; செயல்படும்.

உணவகங்களில் அமர்ந்து உண்பது தடை செய்யப்பட்டுள்ளது. பார்சல் முறையில் உணவுகள் வழங்கலாம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 144 தடைச்சட்டம் இன்று(24.03.2020) மாலை 6.00 மணி முதல் 01.04.2020 காலை 6.00 மணி வரை அமலில் இருக்கும். பொதுமக்கள் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தடுக்கும் வகையில் வெளியிடங்களுக்கு செல்லாமல் வீட்டில் இருந்து ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.

---

செ.வெ.எண்: 55 நாள்: 24-03-2020

# பத்திரிக்கைச் செய்தி

கொரோனா வைரஸ் தொற்று நோயைத் தடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் 24.03.2020 மாலை 6.00 மணி முதல் 01.04.2020 காலை 6.00 மணி வரையில் குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 144 (1)–ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், பொது இடங்களில் கூட்டம் கூடுவதை தவிர்க்க வேண்டும். அவசரத் தேவைகளுக்கு மட்டும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும். ஐந்து நபர்கள் மற்றும் அதற்கும் மேலாக பொது இடங்களில் கூடவோ, கூட்டமாக செல்லவோ கூடாது. மீறுபவர்கள் மீது சட்ட விதிகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் .

அரசால் விலக்களிக்கப்பட்ட மளிகைக் கடைகள், காய்கறிக் கடைகள், பால், பழங்கள் அனைத்து வகையான இறைச்சிக் கடைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகிய அத்தியாவசிய இனங்கள் தொடர்ந்து செயல்படும். மாவட்டத்தில் உள்ள மற்ற அனைத்து வணிக நிறுவனங்கள், மதுபானக் கடைகள், தன்னாட்சி நிறுவனங்கள் இக்காலக் கட்டத்தில் மூடப்பட வேண்டும்.

தனியார் பேருந்துகள், அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், வாடகை மகிழுந்துகள், ஆட்டோக்கள், ஷேர் ஆட்டோக்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகள் தடை செய்யப்படுகின்றன. எனினும், அத்தியாவசியப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட வாகனங்கள், ஆம்புலன்ஸ் சேவை, மருத்துவமனைகள் சார்ந்த வாகனங்கள், இறுதிச் சடங்கிற்கான வாகனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கிடையேயானா போக்குவரத்து சேவைகள் தடை செய்யப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டுள்ள அரசு பொதுத் தேர்வுகள் நடத்துவதற்கான அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தவிர அனைத்து ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் 31.03.2020 வரை வீட்டில் இருந்து பணியாற்றுவர். அனைத்து செவிலியர் கல்லூரிகள் மற்றும் மருத்துவத்துறை சார்ந்த கல்வி நிறுவனங்கள், வங்கிகள், அஞ்சலகங்கள் தொடர்ந்து செயல்படும்.

உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகளில் அமர்ந்து உணவருந்த தடை செய்யப்பட்டுள்ள நேரத்தில், அவர்கள் பார்சல் வழங்கிட தடையேதும் இல்லை.

பொதுமக்களுக்கான அத்தியாவசியத் தேவைகள் கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி மாவட்டம்.

செய்தி வெளியீடு எண். 158 நாள்: 24.03.2020

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 144-ன் கீழ், ஊரடங்கு உத்தரவு அமல்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 144-ன் கீழ், ஊரடங்கு உத்தரவு அமல்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (24.03.2020) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

கொரோனா நோய் தடுப்பு பணிகள் தினந்தோறும் கண்காணிக்கப்பட்டு வரும் நிலையில், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 6 முறை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் கூட்டங்கள் நடத்தி, உரிய அறிவுரைகளை வழங்கி உத்தரவுகள் பிறப்பித்துள்ளார்கள். இதனைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர் தலைமையில் Task Force அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர்களுடன் 3 முறை காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, போதிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு சுகாதாரத்துறை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக கூட்டங்கள் நடத்தி, தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வரை திருவள்ளூர் மாவட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள 229 நபர்கள் கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில், 57 நபர்களை அவர்களின் இருப்பிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, 157 நபர்கள் தொடர் கண்காணிப்பில் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 144-ன் கீழ், ஊரடங்கு உத்தரவு 22.03.2020 அன்று கடைபிடிக்கப்பட்டது போல், இன்று 24.03.2020 மாலை 6.00 மணிமுதல் 01.04.2020 வரை அரசின் ஊரடங்கு உத்தரவு அமலுக்கு வரவுள்ளது. மாவட்டத்தின் அனைத்து எல்லைகளும் மூடப்படவுள்ளது. இரயில்கள், தனியார் பேருந்துகள், ஆட்டோக்கள் ஆகியவை இயங்காது.

கொரோனா வைரஸ் தொடர்பான தவறான தகவல்களை பரப்பும் செயல்களில் ஈடுபடுவர்கள் மீது பொது சுகாதாரச் சட்டம் 1939-ன் விதி 41, 43, 44-ன் படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊரடங்கு உத்தரவு அமலுக்கு வரவுள்ள நிலையில், அத்தியாவசிய தேவைகளான பால், மருந்தகங்கள், மருத்துவமனைகள், பெட்ரோல் பங்க்குகள், வங்கி ஏ.டி.எம்., மளிகைக் கடைகள், காய்கறிக் கடைகள் மற்றும் இறைச்சி கடைகள் உள்ளிட்டவைகள் இயங்குவதற்கு எவ்வித தடைகளும் இல்லை. மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகள், கூட்டுறவு

அங்காடிகள் மற்றும் அம்மா உணவகங்கள் செயல்படும். ஆதரவற்ற முதியோர்கள் உணவருந்தும் வகையில், அவர்களுக்கு தேவையான உணவினை, அவர்கள் வசிக்கும் இடங்களில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாவட்டத்தில் செயல்படும் அனைத்து திரையரங்குகள், கேளிக்கை விடுதிகள், பொழுதுபோக்கு பூங்காக்கள், நீச்சல் குளங்கள், உடற்பயிற்சி மையங்கள், மக்கள் அதிகம் கூடும் வணிக வளாகங்கள், கோடைக்கால பயிற்சி வகுப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், ஊர்வலங்கள், கலாச்சார நிகழ்வுகள், விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்வுகளுக்கு 31.03.2020 அன்று வரை அனுமதி வழங்கக் கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் தவிர, வேறு எந்த ஒரு நிகழ்ச்சியும் திருமண மண்டபத்தில் நடத்தக் கூடாது. அவ்வாறு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகளில் கூட குறைந்த அளவில் பங்கேற்க வேண்டும். புதிய நிகழ்ச்சிகள் எதுவும் 31.03.2020 வரை நடைபெறுவதை திருமண மண்டபத்தின் உரிமையாளர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதே போன்று, திருவிழாக்கள், துக்க நிகழ்வுகள் உள்ளிட்ட அனைத்து சமூக நிகழ்வுகளில் மக்கள் குறைந்த அளவில் கூடினால் கொரோனா வைரஸ் பரவுவதை பெரிய அளவில் தடுக்க முடியும்.

மாவட்ட வழங்கல் அலுவலர் மூலம், மக்களின் அத்தியாவசிய பொருட்களை அதிக விலையில் விற்பனை செய்பவர்களையும், பொருட்களை பதுக்குபவர்களையும் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் அதிகம் கூடுவதை தடுப்பதற்கும், மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பாதுகாப்பு பணியில் அதிகமான போலீஸ் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் முன்னெச்சரிக்கையுடன் கடைபிடிக்க வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகளாக கொரோனா தொற்றை வரும் முன் தடுக்க பொதுமக்கள் கை, கால்களை சோப்பு போட்டு, குறைந்தபட்சம் 30 விநாடிகள் நன்றாகக் கழுவ வேண்டும். சமீபத்தில் வெளிநாட்டிலிருந்து திரும்பியவர்களின் விவரத்தை அக்குடும்பத்தினர் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திடம் தொலைபேசி எண். 104 / 1077 மூலமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட நிர்வாகம் உங்களை தொடர்புகொள்ளும்வரை, வீட்டிலேயே தனித்து இருக்க வேண்டும்.

சளி, இருமல், காய்ச்சல், மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் இருந்தால், உடனடியாக அரசு மருத்துவரிடம் சென்று உடல் பரிசோதனை செய்தல் வேண்டும். நோய்த்தொற்று கண்டறியப்பட்டால், தவறாமல் மருத்துவரின் ஆலோசனைப்படி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். சுயமாக சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டாம். 144 தடை உத்தரவு அமலில் இருப்பதால், ஒரே இடத்தில் 4 நபர்களுக்கு மேல் கூட்டமாக இருக்கக் கூடாது. அவரவர் வீட்டிலேயே நீங்கள் இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களுக்காக வெளியே வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், இரு நபர்களுக்குமிடையே குறைந்தபட்சம் 3 அடி இடைவெளி இருக்க வேண்டும்.

இருமல், தும்மல் வந்தால் ஒரு கைக்குட்டையாலோ, துணியாலோ மற்றவர்களுக்கு நோய் பரவ இடம் கொடுக்காமல் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும். மிகவும் அத்தியாவசிய தேவைகள் தவிர வேறு எதற்கும் நீங்கள் வெளியே வர வேண்டாம். பதற்றமோ, பீதியோ அடைய வேண்டாம். வீண் வதந்திகளை நம்ப வேண்டாம். மாவட்ட நிர்வாகம் பொதுமக்களின் நலன் கருதி எடுத்து வருகிறது. எனவே, இதனைத் உணர்ந்து பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வெ.முத்துசாமி, திட்ட இயக்குநர்கள் திருமதி.க.லோகநாயகி (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை), திரு.வை.ஜெயக்குமார் (தமிழ்நாடு மாநில ஊரகம் (ம) நகர்ப்புறம் வாழ்வாதாரம் இயக்கம்), இணை இயக்குநர் (மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள்) மரு.இளங்கோவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜவஹர்லால் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**

செ.வெ.எண்: 30/ 2020 நாள்: 24.03.2020

# திருப்பூர் மாவட்டம்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். க.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு !!!

அண்மைக் காலத்தில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தாக்குதலிலிருந்து மக்களை காத்திடும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அவற்றில் ஒன்றாக சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையினால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.152-ன்படி 144 தடை உத்தரவு பிறப்பிக்க மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரால் திருப்பூர் மாவட்டம் முழுமைக்கும் 24.03.2020 பிற்பகல் 06.00 மணி முதல் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 144-ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தடைக்காலத்தில் முழுமையாக திருப்பூர் மாவட்ட எல்லைகள் மூடப்பட்டிருக்கும். தடை உத்தரவு அமலில் இருக்கும் காலத்தில் 5 நபர்களுக்கு மேல் பொது இடங்களில் கூடுவது தடை செய்யப்பட்டுள்ளது. சிறிய மளிகைக் கடைகள், காய்கறி கடைகள் மற்றும் உணவகங்கள், தேநீர் கடைகள், அம்மா உணவங்கள், மருந்தகங்கள், ஆவின் பால் விற்பனை நிலையங்கள், அரசு நியாய விலை கடைகள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் தவிர மற்ற அனைத்து வியாபார நிறுவனங்களும் இயங்காது. சில அத்தியாவசிய துறைகள் தவிர இதர அனைத்து அரசு அலுவலகங்களும், பொதுத்துறை நிறுவனங்களும் இயங்காது. அத்தியாவசிய பண்டங்கள், உணவுப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் மருந்துபொருட்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள், அவசர ஊர்திகள் (ஆம்புலன்ஸ்) தவிர இதர அரசு மற்றும் தனியார் பேருந்துகள், ஒப்பந்த வாகனங்கள், வாடகைக் கார்கள், ஆட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்கள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. வங்கிகள், ஏடிஎம் மையங்கள், பெட்ரோல் நிரப்பு நிலையங்கள், எரிவாயு விநியோக மையங்கள், விவசாய விலை பொருட்கள் விற்பனை மையங்கள், கால்நடை தீவன விற்பனை கடைகள், வழக்கம் போல் இயங்கும். உணவகங்களில் உணவருந்த அனுமதியில்லை, பார்சல் வாங்கி செல்லலாம். தேநீர் கடைகளில் அதிக கூட்டம் கூடுவதற்கு அனுமதியில்லை. மருத்துவ உபகரணங்கள், மற்றும் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு தடையில்லை.மின்சார விநியோகம், குடிநீர் விநியோகம், தபால் மற்றும் தொலைபேசி சேவைகள், குடிநீர்கேன் விநியோகம் ஆகியவைகள் வழக்கம் போல் செயல்படும். 16.03.2020-க்கு முன்னர் நிச்சயிக்கப்பட்ட இனங்கள் மட்டும் அதிகபட்சம் 30 பங்கேற்பாளர்களுடன் நடத்திட திருமண மண்டபங்களுக்கு தடையில்லை. அதற்கும் மேல் மக்கள் பங்கேற்கக்கூடாது.

கொரோனா வைரஸ் நோய் பரவலை தடுத்திடும் பொருட்டு மாவட்டத்தில் துணை ஆட்சியர் நிலையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொரு வட்டத்திலும் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து நோய் தொற்று பரவாவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்வது உட்பட அனைத்து முன்னெச்சரிக்கை / பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளவர்களை கண்காணிக்க வருவாய்துறை / காவல்துறை / சுகாதாரத்துறை அலுவலர்களைக் கொண்டு தனிமைப்படுத்தலைக் கண்காணிக்கும் குழு, மருத்துவமணை வளாகத்தினுள் சுகாதாரத்துறை அலுவலர்களைக் கொண்டு துாய்மைப்படுத்துதல் மற்றும் தொற்று நீக்குதல் குழு, பொது இடங்களில் சமூக விலகல் மற்றும் பின்பற்றுதலை கண்காணிக்க பல்துறை அலுவலர்களைக் கொண்ட குழுக்கள் உள்ளிட்ட கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

எனவே, கொரோனா வைரஸ் நோய் தாக்குதலிலிருந்து பொது மக்களை காத்திடும் பொருட்டு மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் அனைவரும் முழுஒத்துழைப்பு நல்கிடுமாறும், தடை உத்தரவு அமலில் உள்ள காலத்தில் முழுமையாக அரசின் உத்தரவிற்கு கட்டுப்பட்டு அதற்கேற்ப செயல்படுமாறும், திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். க.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**

**IN THE COURT OF DISTRICT MAGISTRATE AND DISTRICT COLLECTOR, TIRUCHIRAPPALLI**
**PRESENT : Thiru. S.SIVARASU, I.A.S.,**
**(Prohibitory Order u/s 144 Cr.P.C.)**

**R.C.No.D3/100/2020** **Dated: 24.03.2020**

To
The Persons concerned.

Whereas, the Government vide their Order, **G.O.(Ms) No.152, Health and Family Welfare (P1) Department, dated: 23.03.2020,** have ordered certain restrictions imposed in the territorial jurisdiction of the State of Tamil Nadu from **18.00 hrs of 24.03.2020 to 06.00 hrs of 01.04.2020** under section (2) of Epidemic Disease Act, 1897.

Whereas, it has been noticed that there is imminent possibility to mitigate the spread of **COVID-19** in Tiruchirappalli District, the following prohibitory orders to maintain public health, public safety and public order is absolutely necessary.

- **Any congregation of more than 05 (five) persons in public place is prohibited.**
- People are required to stay at home and come out only for accessing basic an essential services and strictly follow social distancing norms detailed in Government Order mentioned above and maintain a distance of 01 meter or 03 feet norms.
- All suspected cases and foreign returnees, who arrived after 1st March, 2020 are directed to remain under strict home quarantine for such period as decided by local Health Authorities.
- Public transport services including operation of private buses, stage / contract carriages, State Transport Undertakings, Metro services, taxis, share-autos, auto-rickshaws and ride sharing services including air-conditioned bus services of State Transport Corporation and private operators **will not be permitted,** except the categories indicated in the Government Order mentioned above.
- All Inter-district services shall not be operated.
- However, establishments notified under list of exempt services / activities in G.O.(Ms) No.152, Health and Family Welfare (P1) Department, dated: 23.03.2020, shall be exempt from the above restrictions.

And whereas, emergent circumstances do not admit the service of notice to the parties concerned necessitating this order to be passed ex-parte as per the provision laid down u/s 144 (2) Cr.P.C.

Now, therefore, with a view to curtail the spread of COVID-19 and to maintain public health, public safety and public order in Tiruchirappalli District, I do hereby promulgate order u/s 144 Criminal Procedure Code,1973 **prohibiting any congregation of more than 05 (five) persons in public place, in Tiruchirappalli District including Tiruchirappalli city police limit.**

This order will be effective from **18.00 hrs of 24.03.2020 to 06.00 hrs of 01.04.2020**.

Issued under my hand and seal dated this 24th day of March 2020.

**SCHEDULE**

**"COMPLETE TIRUCHIRAPPALLI DISTRICT"**

24/3/20

**DISTRICT MAGISTRATE AND DISTRICT COLLECTOR, TIRUCHIRAPPALLI.**

| | |
|---|---|
| **Copy to:** | All Taluk Executive Magistrate and Tahsildar, Tiruchirappalli District. |
| **Copy to:** | The Public Relation Officer, Tiruchirappalli. |
| **Copy to:** | All Regional Transport Officers, Tiruchirappalli. |
| **Copy to:** | All Deputy Superintendent of Police, Tiruchirappalli District. |
| **Copy to:** | All Assistant Commissioner of Police, Tiruchirappalli City. |
| **Copy to:** | The Sub Divisional Magistrate and Revenue Divisional Officer, Tiruchirappalli and Lalgudi. |
| **Copy to:** | The Sub Divisional Magistrate and Sub Collector, Srirangam and Musiri. |
| **Copy to:** | The Deputy Commissioner of Police, (Law & Order) Tiruchirappalli |
| **Copy to:** | The Deputy Commissioner of Police, (Crime & Traffic) Tiruchirappalli |
| **Copy to:** | The District Revenue Officer, Tiruchirappalli |
| **Copy to:** | The Superintendent of Police, Tiruchirappalli |
| **Copy to:** | The Commissioner of Police, Tiruchirappalli |
| **Copy to:** | The Secretary to Government, Health and Family Welfare Department, Chennai. |
| **Copy to:** | The Additional Chief Secretary to Government, Home (P&E) Department, Chennai. |

செ.வெ.எண்-61 நாள்-23.03.2020

# அரியலூர் மாவட்டத்தில் 11 இடங்களில் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து செய்தியாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கொரோனா வைரஸ் நோய் உலக அளவில் பொது சுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில் உலக சுகாதார நிறுவனம் இதனை தற்போது உலகளாவிய நோய் தொற்றாக அறிவித்துள்ளது. இந்திய அளவிலும் தமிழகத்திலும் பல்வேறு அவசர கால நடவடிக்கையின் அடிப்படையில் நோய் தொற்று பரவா வண்ணம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் கூட்டமாக இருக்க வேண்டாம். ஒருவகொருவர் பேசும் போது தங்களுக்குள் இடைவெளி விட்டு நின்று பேசவும், குடும்ப உறுப்பினர்களே இடைவெளி விட்டு இருக்கவும். அரியலூர் மாவட்டத்தில் 24 மணி நேரமும் மருத்துவக்குழுக்கள் கண்காணித்து வருகின்றனர். வெளி மாவட்டங்களிலிருந்து வருபவர்களுக்கு மருத்துவ சோதனையும் செய்யப்பட்டுவருகிறது. மாவட்ட அளவில் 11 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு மாவட்டத்திற்குள் வரும் நபர்கள் பரிசோதனை செய்து, கண்காணிக்கப்பட உள்ளனர். தடையுத்தரவை முன்னிட்டு அத்தியாவசிய பெருட்களான காய்கறிகள், பழங்கல், பால் ஆகியவகைள் எவ்வித தடையுமின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பொது இடத்தில் 5 நபா்களுக்கு மேல் கூடுவது தவிர்க்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய மற்றும் அவசர பணிகளை தவிர பொதுமக்கள் யாரும் வெளியே வருவதை தவிர்க்க வேண்டும். இத்தடைக்காலத்தில் அத்தியாவசிய பொருட்களான உணவு பொருட்கள், மருந்துபொருட்கள் போன்றவற்றின் போக்குவரத்தும் எந்தவொரு தடையும் ஏற்படாத வண்ணம் செயல்படும். குடும்பத்தினா் நோய் தொற்று ஏற்படாத வண்ணம் தனி நபர் சுகாதாரம் கடைபிடிக்க வேண்டும்.

மேலும், அரியலூர் மாவட்டத்திலிருந்து பணி நிமித்தமாக வெளிநாடுகளுக்கு சென்று தற்போது சொந்த ஊா் திருப்பியுள்ள 278 நபா்களை கண்டறியப்பட்டது. மருத்துவக்குழுவினரால் கொரோனா வைரஸ் பரிசோதனை செய்யப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட நிர்வாகத்திலுள்ள கட்டுப்பாட்டு அறையிலுள்ள மருத்துவக்குழுவினரால் அலைபேசி வாயிலாக தினந்தோறும் தொடர்பு கொள்ளப்பட்டு, தங்களுக்கு கொரோனா வைரஸ் தொடர்பான அறிகுறிகள் சளி, காய்ச்சல் மற்றும் இதர உடல் உபாதைகள் ஏதேனும் உள்ளதா என விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். மேலும், இவர்கள் குறித்த விபரங்கள் www.stopcorona.tn.gov.in, www.stopcoronatn.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள நபர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தி அவர்களின் வீட்டு முகப்பு பகுதிகளில் ஒட்டுவில்லைகள் ஒட்டி,மற்றவர்கள் யாறும் அந்த வீட்டுக்குள் நுழையாமல் கண்காணித்து வருகிறார்கள். அரியலூர் அரசு தலைமை மருத்துவமனைகளில் 200 படுகைகள் கொண்டு தனிமைப்படுத்தப்பட்ட அறை தயார் நிலையில் உள்ளது.

பொதுமக்கள் தங்களுக்கு ஏதேனும் காய்ச்சல் அறிகுறி ஏற்பட்டால் அரியலூா் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **24 மணி நேரமும்** செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறைக்கு **1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், 04329 - 228709 என்ற** தொலைபேசி எண்ணிலும் தகவல் தெரிவிக்கப்பட்டால், உடனடியாக தங்கள் இருக்கும் இடத்திற்கே மருத்துவக்குழுவினரால் பரிசோதனை செய்து, ஆலோசனைகள் வழங்கப்படும். மேலும், அச்சபடாமல், பீதியடையாமல் தங்களே முன்வந்து அருகிலுள்ள சுகாதார நிலையத்தில் பரிசோதனை செய்துக்கொள்ள வேண்டும். பொதுமக்கள் அருகிலுள்ளவர்களுக்கு காய்ச்சல் ஏதேனும் அறியப்பட்டாலோ மாவட்ட நிர்வாகத்திற்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

தேவையில்லாமல் கைகளை வாய், மூக்கு, கண்களில் வைக்க வேண்டாம். பொதுமக்கள் அனைவரும் தங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொண்டு இந்த தொற்று பரவாமல் தடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறும், சமூக ஊடகங்களில் வரும் தவறான பரப்புரைகளை நம்ப வேண்டாம் எனவும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், மருத்துவக்கல்லூரி தலைவர் முத்துகிருஷ்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிச்சாமி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**